**பிப்ரவரி – 11**

# TNPSC துளிகள்

- அருணாச்சலப் பிரதேசத்தின் இடா நகரில் தூர்தர்ஷன் அருண் பிரபா என்ற தொலைக் காட்சி அலைவரிசையை பிரதமர் துவக்கி வைத்திருக்கின்றார். இது வடகிழக்கு தொலைக்காட்சி என்ற அலைவரிசைக்குப் பிறகு வடகிழக்குப் பகுதியில் தூர்தர்ஷனின் 2வது அலைவரிசை ஆகும்.
- மத்தியப் பட்டு வாரியத்துடன் இணைந்து ஜவுளித்துறை அமைச்சகம் புதுதில்லியில் 2019-ம் ஆண்டு பிப்ரவரி 9ம் தேதியன்று "எழுச்சி பெறும் பட்டு - சாதனை மற்றும் மேலும் முன்னேற்றம்" என்ற நிகழ்ச்சியை நடத்தியிருந்தது.
- மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் குஜராத் மாநிலத்துடன் இணைந்து மூன்று வருட அளவிலான ஆசிய சிங்கங்களின் பாதுகாப்புத் திட்டம் என்பதை ஆரம்பித்திருக்கின்றது. இந்த மிகப்பெரிய பூனை வகைகளின் கடைசிப் புகலிடமாக குஜராத் விளங்குகிறது.
    - குஜராத் அரசு, சிங்கங்களுக்கான சிறப்பு கால் நடை மருத்துவமனைகள் மீதும் முழுமையான வசதியுடைய அவசர வண்டிகளுக்காகவும் வேண்டி செலவிடப்படும் 80 கோடி ரூபாயை ஏற்கனவே நிறைவேற்றியிருக்கின்றது.
- பி.எ. சங்மாவின் நினைவாக மேகாலய மாநில அரசு திக்கிபண்டி மைதானத்திற்கு மறுபெயரிட முடிவெடுத்திருக்கின்றது.
    - துரா நகரில் AMPT சாலையை நோக்கிச் செல்லும் ஒரு சந்திப்புப் பகுதியும் திக்கிபண்டி மைதானத்துடன் சேர்த்து P.A சங்மாவின் பெயரிடப்பட்டு இருக்கின்றது.
- திரிபுராவின் கடைசி அரசரான மகாராஜா பீர் பிக்ரம் கிஷோர் மாணிக்யாவின் சிலையை அகர்தலா விமான நிலையத்தில் பிரதமர் திறந்து வைத்தார்.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை 2019-20

- தமிழக துணை முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 8ம் தேதியன்று தமிழக சட்டப் பேரவையில் 2019-20 நிதியாண்டிற்கான மாநில நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்தார்.

*சிறப்புக் கூறுகள்*

- தமிழ்நாட்டின் நிதிப் பற்றாக்குறை 2019-20ம் நிதியாண்டில் 44,176.30 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது நிதி விதிமுறையான 3 சதவிகிதம் என்ற வரம்பிற்குள்ளாக, ஒட்டு மொத்த மாநில உற்பத்தியில் 2.50 சதவிகிதமாக இருக்கும்.
- மாற்றுத் திறனாளி நபர்களுக்கு 3000 இரு சக்கர இயந்திர வண்டிகள் வழங்கப்படும்.
- கரிம வேளாண்மையை ஊக்குவிப்பதற்காக அனைத்து மாவட்டங்களிலும் கரிம வேளாண்மை சான்றளிப்பு மையங்கள் அமைக்கப்படும்.
- 80 ஆழ்கடல் மீன்பிடிப் படகுக் குழுக்களுக்கு 240 நேவிக் கருவிகள், 160 ஐசாட்-2 செயற்கைக் கோள் தொலைபேசிகள், 160 நாவ்டெக் உபகரணங்கள் ஆகியவற்றை

அரசு வழங்க முன்மொழிந்திருக்கின்றது.

- 2000 மின்சாரப் பேருந்துகளை வாங்குவதற்கு அரசு திட்டமிட்டிருக்கின்றது.
- பழங்குடி மாணவர்களின் நலனிற்காக மிகவும் பின்தங்கிய பழங்குடியினர் பகுதிகளில் புதிய பள்ளிகளை ஆரம்பிக்கின்ற அரசு சாரா குழுக்களுக்கு ஆதரவளிக்க மாநில அரசு 25 கோடியை ஒதுக்கி இருக்கின்றது.
- தமிழ்நாடு மின்னணு நிர்வாக நிறுவனத்தின் கீழ், செயற்கை நுண்ணறிவு, பெருந் தகவல், இயந்திரக் கற்றல், ஆளில்லா விமானங்கள், இணைய தள விவகாரங்கள் ஆகியவற்றை உபயோகித்திட "சிறப்பு நிபுணத்துவ மையம்" ஒன்று அமைக்கப்படும்.
- உலக வங்கியின் உதவியுடன் தமிழ்நாடு சுகாதார அமைப்பு சீர்திருத்தத் திட்டம் வெளியிடப்படும்.
- 250 மெகாவாட் திறனுடன் தேனி, சேலம் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் சூரிய ஒளி மின்சாரத் திட்டங்களை ஆரம்பிக்க அரசு முன்மொழிந்திருக்கின்றது.

# தேசியச் செய்திகள்

## 8 மருத்துவ உபகரணங்கள் மருந்துப் பொருட்களாக அறிவிக்கப்படுதல்

- 2020ம் ஆண்டு ஏப்ரல் 1 முதல், மருந்து மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டத் திருத்த பிரிவு 3ன் கீழ் அனைத்துப் பொருத்தப்படக்கூடிய கருவிகள் உட்பட 8 மருத்துவ உபகரணங்களை மத்திய சுகாதார அமைச்சகம் மருந்துப் பொருட்களாக அறிவித்து இருக்கின்றது.
- இந்த மருத்துவ உபகரணங்கள் பின்வருமாறு
    - அனைத்துப் பொருத்தப்படக்கூடிய மருத்துவ உபகரணங்கள்
    - சிடி ஸ்கேன்
    - எம்.ஆர்.ஐ கருவி
    - உதறல் நீக்கு இயந்திரம்
    - டயாலிசிஸ் உபகரணம்
    - PET இயந்திரம்
    - எக்ஸ்ரே இயந்திரம்
    - எலும்பு மஜ்ஜை செல் பிரிப்பு இயந்திரம்
- தேசிய மருத்துவ உபகரணங்களுக்கான ஒழுங்குமுறை ஆணையமான மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு நிறுவனம் (The Central Drugs Standard Control Organisation - CDSCO), மருத்துவ உபகரணங்களின் பயன்பாடு மற்றும் விற்பனையை ஒழுங்குபடுத்தும் ஒரு வழிமுறையை உருவாக்கிட பணிபுரிந்துக் கொண்டிருக்கின்றது.

# சர்வதேசச் செய்திகள்

## கட்லாஸ் எக்ஸ்பிரஸ் நடவடிக்கை

- வருடாந்திர பன்னாட்டு கடற்படைக் கூட்டுப் பயிற்சியான "கட்லாஸ் எக்ஸ்பிரஸ்" 2019ம் ஆண்டு ஜனவரி 27 முதல் பிப்ரவரி 6 வரை நடத்தப்பட்டது.
- இது வருடாந்திர பன்னாட்டு கடற்படைக் கூட்டுப் பயிற்சியின் 8வது பதிப்பாகும். இது டிஜிபவுட்டி, மொசாம்பிக் மற்றும் செசல்ஸ் ஆகிய நாடுகளின் அருகாமையில் நடத்தப்பட்டது.
- ஐ.என்.எஸ் திரிகாந்த் என்ற கப்பலோடு இந்தியக் கடற்படை இந்தப் பயிற்சியில் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டது.
- இப்பயிற்சி இந்தியப் பெருங்கடலின் மேற்குப் பகுதியில் சட்ட அமலாக்கத்தின் திறனை மேம்படுத்துவது, பிராந்தியப் பாதுகாப்பை மேம்படுத்துவது, சட்ட விரோதமான கடற்பயண நடவடிக்கைகளில் தலையிடும் பொருட்டு அதில் ஈடுபடும் நாடுகளின் ஆயுதப் படைகளுக்கிடையே இணைந்து செயலாற்றும் தன்மையை அதிகப்படுத்துவது ஆகிய காரணங்களுக்காக நடத்தப்பட்டது.
- இந்த வருடாந்திர கட்லாஸ் எக்ஸ்பிரஸ் பயிற்சி அமெரிக்க ஆப்பிரிக்கக் கட்டுப்பாட்டுப் பிரிவால் ஆதரவளிக்கப்பட்டு ஆப்பிரிக்கக் கடற்படைகளால் நடத்தப்படுகின்றது.

# பொருளாதாரச் செய்திகள்

## நிதியியல் சேவைகளை ஒழுங்குபடுத்துவதற்கான ஆணையம்

- இந்தியாவில் உள்ள சர்வதேச நிதிச் சேவைகள் மையத்தில் நடைபெறும் அனைத்து நிதியியல் சேவைகளையும் ஒழுங்குபடுத்த ஒரு ஒன்றுபட்ட ஆணையத்தை ஏற்படுத்திட மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கிடயிருக்கின்றது.
- இது சர்வதேச நிதிச் சேவை மைய ஆணைய மசோதா 2019 என்பதன் மூலமாக நிறைவேற்றப்படுகின்றது.
- இந்தியாவின் முதலாவது சர்வதேச நிதிச் சேவை மையமானது குஜராத்தில் உள்ள காந்திநகரில் கிப்ட் நகரத்தில் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இமாலய மேக ஆய்வு மையம்

- இமாலயப் பகுதியில் ஏற்படும் மேக வெடிப்பு ஆபத்துக்களைக் கண்காணித்து முன்கூட்டியே அதைக் கணிக்கும் நோக்கத்தை உறுதிப்படுத்தவும், அதனால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கவும் உத்தரகாண்டின் தெகிரி மாவட்டத்தில் இமாலய மேக ஆய்வு மையம் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றது.
- இந்த ஆய்வு மையம் பாதுஷாஹிக்தாவுல் நகரின் எஸ்ஆர்டி வளாகத்தில் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றது. தற்போது இது சோதனை ஓட்டத்தில் இருக்கின்றது.

- அதி உயரப் பகுதிகளில் செயல்படும் வகையில் இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையாலும் (Indian Science and Technology Department) கான்பூரின் இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தாலும் இணைந்து மேகத்தின் நடவடிக்கைகளை கண்காணித்திடும் வகையில் ஏற்படுத்தப்பட்ட நாட்டின் இரண்டாவது ஆய்வு மையம் இதுவாகும்.

# மாநிலச் செய்திகள்


## ஜம்மு காஷ்மீரின் 3வது நிர்வாகப் பிரவு

- குளிர் பாலைவனப் பிரதேசமான லடாக், ஜம்மு காஷ்மீரின் மூன்றாவது நிர்வாகப் பிரிவாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.
- கடுமையான பனிப் பொழிவின் காரணமாக வெளி உலகத்தோடு ஆறு மாத காலத்திற்குத் தொடர்பிழந்த நிலையிலிருக்கும் பனிப் பாலைவனப் பிரதேசத்திற்கு ஆளுநர் சத்யபால் மாலிக்கின் நிர்வாகம் கோட்டப் பிரிவுத் தகுதி நிலையை வழங்கியது.
- இந்த கோட்டப் பிரிவு லே நகரை அதன் தலைமையகமாகக் கொண்டு லே மற்றும் கார்கில் மாவட்டங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.
- இந்த புதியக் கோட்டத்திற்கு கோட்டாட்சி ஆணையர் மற்றும் காவல் துறை ஆய்வாளர் ஜெனரல் ஆகிய இரு புதிய பதவிகளின் உருவாக்கத்திற்கு அனுமதியளிக்கப் பட்டிருக்கின்றது.

# முக்கிய தினங்கள்

## உலக பருப்பு தினம் 2019 - பிப்ரவரி 10

- 2019ம் ஆண்டு பிப்ரவரி 10ம் தேதி உலகின் முதலாவது பருப்பு தினம் கொண்டாடப் பட்டது.
- 2016ம் ஆண்டு நீடித்த உணவு உற்பத்தி, உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து ஆகியவற்றில் பருப்புகளின் பங்களிப்பைக் காட்சிப்படுத்திட சர்வதேச பருப்பு வருடமாக அனுசரிக்கப்பட்டது.



- ❖ சர்வதேச பருப்பு வருடத்தின் நேர்மறையான உத்வேகத்தைக் கட்டமைக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை பிப்ரவரி 10ம் தேதியை உலக பருப்பு தினமாக அனுசரிக்கும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- ❖ 2016 ஆம் ஆண்டு சர்வதேச பருப்பு வருடம் என்ற பரப்புரை உணவு மற்றும் விவசாயக் கழகத்தால் வெற்றிகரமாக அனுசரிக்கப்பட்டப் பிறகும், இந்த ஆரேக்கியமான, ஊட்டச்சத்து நிறைந்த, புரதம் நிரம்பிய நைட்ரஜனைப் பொருத்துகின்ற அவரையம் எனப்படும் பருப்பு வகைகள் மீது ஏற்பட்ட நேர்மறையான உத்வேகத்தை நீடிக்கச் செய்திட இத்தினம் எண்ணுகின்றது.

# இதரச் செய்திகள்

## சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள்

- ❖ இந்தியாவில் சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் (International Labour Organisation - ILO) நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் நொய்டாவில் உள்ள V.V கிரி தேசிய தொழிலாளர் பயிற்சி நிறுவனத்தில் மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை இணையமைச்சர் சந்தோஷ் கங்வாரால் துவக்கி வைக்கப்பட்டது.
- ❖ ஆரம்பகால உறுப்பினராக இந்தியா இந்நிறுவனத்தின் ஒவ்வொரு துறையிலும் முக்கியப் பங்காற்றியிருக்கின்றது.
- ❖ கடந்த நூற்றாண்டில் அனைத்து எட்டு முக்கிய ஒப்பந்தங்கள் உள்பட 189 சர்வதேச தொழிலாளர் நிறுவன ஒப்பந்தங்களில் 47 ஒப்பந்தங்களுக்கு இந்தியா ஒப்புதல் அளித்திருக்கின்றது.

### *சர்வதேச தொழிலாளர் நிறுவனம்*

- ❖ அனைத்து மக்களுக்கும் வேலைவாய்ப்புகளையும் சமூகப் பாதுகாப்பையும் அளிக்கவும் சர்வதேச தொழிலாளர் தர நிர்ணயங்களை ஏற்படுத்தவும் இயங்கிடும் சர்வதேச தொழிலாளர் நிறுவனமானது ஒரு ஐக்கிய நாடுகள் நிறுவனமாகும்.
- ❖ இந்நிறுவனம் ஐக்கிய நாடுகளின் உறுப்பினர் நாடுகளில் 193ல் 186 நாடுகளோடு குக் தீவுகளையும் சேர்த்து மொத்தம் 187 நாடுகளை தனது உறுப்பு நாடுகளாகக் கொண்டுள்ளது.

- ❖ அரசு, நிறுவனங்கள் மற்றும் தொழிலாளிகள் ஆகியோர் வெளிப்படையாக விவாதித்து தொழிலாளர் தரநிர்ணயங்களை உருவாக்கிடும் வகையில்

இந்நிறுவனத்தின் முத்தரப்பு பேச்சுவார்த்தை அமைப்பானது ஒரு புதுமையான அம்சமாகும்.

- - - - - - - - - - - - - - - -